ஸ்ரீ:

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

ஸ்ரீமத் வரவர முனயே நம:

ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# ஆர்த்தி ப்ரபந்தம்

# Aarthi Prabandham

English Translation by

Anand Amaladass

“Deliver Me, My Lord” Sri Satguru Publications, 1990.

தேன்பயிலும்தாரான் எதிராசன் சேவடிமேல்
தான்பரமபத்தி தலையெடுத்து மாந்தர்க்கு
உணவாக ஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள் செய்தான்
மணவாள மாமுனிவன் வந்து.

Inspired by the highest devotion
for the feet of [Ramanuja] Prince of Ascetics
Who wears the garland dripping with honey,
Manavalamamuni was born
and out of his mental anguish
[born of this samsaric world of change]
composed the famous verses in Tamil
as food for mankind

வம்பவிழ்தார்வண்மை மணவாளமாமுனிவன்
அம்புவியிற்கால்பொருந்தா வார்த்தியினால் உம்பர்தொழும்
விண்ணுலகிற்செல்ல விரைந்தெதிராசன் பதங்கள்
நண்ணியுரைத்தார் நமக்கு.

The gracious Manavalamamuni
wearing the fragrant garland
being close to the feet of Yatirajan
bequeathed us these poems,
to free us from the unbearable sufferings in the world
and show us the way to heaven, where the Gods worship.

1. வாழியெதிராசன் வாழியெதிராசன்
வாழியெதிராசனென வாழ்த்துவார் வாழியென
வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார் தாளிணையில்
தாழ்த்துவார் விண்ணோர் தலை

The Gods bow their heads
at the feet of those who offer salutations
to the followers who in turn salute
the devotees who praise [Ramanuja] saying
“May Yatirajan prosper,
May Yatirajan prosper,
May Yatirajan prosper”.

2. இராமாநுசாய நமவென்று சிந்தித்து
இராமாநுசரோடு இறைப்போழ்து இராமாறு
சிந்திப்பார்தாளிணையில் சேர்ந்திருப்பார் தாளிணையை
வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு.

The Gods in heaven salute the feet of those
who join the Company [of Bhaktas] who think
that they may not even for a moment
be with those men who do not have
such a though [to meditate on the *mantra*]:
“Salutation to Ramanuja”

3. தந்தை நற்றாய் தாரம் தனயர் பெருஞ்செல்வம்
எந்தனக்குனீயே எதிராசா! இந்த நிலைக்கு
ஏலாத இவ்வுடலை இன்றே அறுத்தருள
பாரததென்னோபகர்?

O Yatiraja
You alone are my father,
my loving mother,
my wife, my children,
my great wealth – you are everything to me.
Now tell me,
why is it that you do not think
of destroying
this body this very day,

which is not fit
to attain such a state
[of union with you]?

4. இந்தவுடற் சிறைவிட்டு எப்பொழுது யானேகி
அந்தமில் பேரின்பத்துளாகுவேன் அந்தோ!
இரங்காய் எதிராச! என்னை இனியுய்க்கை
பரங்காண் உனக்கு உணர்ந்துபார்.

When will I leave the prison of this body?
when will I go and possess eternal bliss?
Alas! Be merciful, O Yatiraja,
Is it not now your responsibility
to save me? Ponder over it.

5. தன்புதல்வன் கூடாமல் தான்புசிக்கும் போகத்தால்
இன்புறுமோ? தந்தை எதிராசா! உன்புதல்வன்
அன்றோ வுரையாய் யான் ஆதலால் உன்போகம்
நன்றோவெனையொழிந்த நாள்?

O Father Yatiraja,
will the father relish the food he eats
in the absence of his son?
[No, he will not.]
Now tell me, am I not your son?
will your bliss [in Heaven]
be complete [and proper]
without me?

6. வேம்புமுற்றக் கைப்புமிகுவதுபோல் வெவ்வினையேன்
தீம்புமுற்றும் தேகமுற்றிச் செல்லுங்கால் ஆம்பரிசால்
ஏற்கவே சிந்தித்து எதிராசா? இவ்வுடலைத்
தீர்க்கவேயான வழிசெய்.

Just as the bitterness in creases
as the neem [fruit] ripens
so too the evil increases
as my body goes on ageing;
for I am a victim of cruel *Karma*.

Yatiraja, consider a suitable way
to put an end to this body
and to receive me [by your favor]

7. அன்னை கிடிநீரருந்தி முலையுண்குழவி
தன்னுடைய நோயைத்தவிராளோ? என்னே!
எனக்கா எதிராசா! எல்லாம் நீசெய்தால்
உனக்கது தாழ்வோஉரை?

Is it not true
that the mother takes medicine
and heals the sickness of her suckling child?
What is this, Yatiraja!
If you do everything for me
will that impair your glory?
Tell me now.

8. தங்குழவிவான் கிணற்றைச் சார்ந்திருக்கக்கண்டிருந்தாள்
என்பதன்றோ அன்னை பழியேற்கின்றாள் நங்குணரில்
என்னாலேயென்னாகுமேலும் எதிராசா!
உன்னாலேயாமுறவையோர்.

The mother accepts the blame
when she sees her child approach the deep well;
when carefully considered,
even though my downfall is my own doing,
Yatiraja,
consider the relationship
[I bear to you] through you.

9. கூபதில்வீழும் குழவியுடன் குதித்து அவ்
வாபத்தை நீக்கும் அந்தவன்னைபோல் பாபத்தால்
யான்பிறப்பேனேலும் இனியெந்தையெதிராசன்
தான்பிறக்குமென்னை யுய்ப்பதா.

Like the mother,
who will leap into the will,
and rescue her child that has fallen into it,
You will take birth again and save me
Father Yatiraja,

even if I should be born again
to expiate my sins?

10. பூமகள்கோன்தென்னரங்கர் பூங்குழற்குப்பாதுகமாய்த்
தாம்மகிழும்செல்வச் சடகோபர் தேமலர்த்தாட்கு
உய்ந்தினியபாதுகமாம் எந்தை இராமாநுசனை
வாய்ந்தெனது நெஞ்சமே! வாழ்

O My min, may you live
close to my Father Ramanuja,
the sweet refuge,
and serve his fragrant feet,
just as the great Satakopan himself
found joy in his worship
at the feet of Narayana,
the Lord of Lakshmi

11. உன்னையொழிய ஒருதெய்வம் மற்றறியா
மன்னுபுகழ்சேர் வடுகநம்பி தன்னிலையை
என்தனக்கு நீதந்து எதிராசா! எந்நாளும்
உன்தனக்கே யாட்கொள்உகந்து.

The illustrious Vatukanampi knew
no other God but you.
Be pleases to bestow on me
that state of mind,
Yatiraja,
that I may for ever be
attached to you
by unswerving faith

12. தேசந்திகழும் திருவாய்மொழிப்பிள்ளை
மாசில்திருமலையாழ்வார் என்னை நேசத்தால்
எப்படியே எண்ணிநின்பால் சேர்த்தார் ஏதிராசா!
அப்படியே நீசெய்தருள்.

Tiruvaimolipillai of shining fame,
of Holy Tirumalaiyalvar,
entrusted me to you out of love;
Yatiraja,

treat me likewise
befitting his name.

13. எதிராசன்வாழி எதிராசன்வாழி
எதிராசன்வாழி யென்றேத்திச் சதிராக
வாழ்வார்கள் தாளிணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவார்
ஆழ்வார்கள் தங்களருள்.

Hail Yatiraja,
Hail Yatiraja,
Hail Yatiraja thus praising,
[the sages live in bliss]
Those who live at the feet of such seers
will receive the grace
of the Alvars.

14. அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ
அதிகாரமில்லாதர்க்கன்றோ எதிராசா!
நீயிரங்கவேண்டுவது நீயும் அதிகாரிகளுக்
கேயிரங்கில் என்செய்வோம்யாம்.

Does the Lord show mercy
only to the virtuous?
Is it not to those who have no worthiness
that Yatiraja should be merciful?
If you too favor only the worthy ones,
to whom else shall we turn for mercy?

15. எம்பெருமானார்திருவடிகளே சரணம்
என்பதுவேநாவுரைக்கும் இத்தாலென்? அன்பவர்பால்
இப்போதளவும் யானென்றும் காண்கின்றிலேன்
எப்போதுண்டாவ தினி?

“I surrender to the holy feet
of our master” [Ramanuja]
so the tongue utters.
Till now I have not felt
that love for him;
when will that come to pass?

16. ஆகாததீதென்றறிந்தும் பிறர்க்குரைத்தும்
ஆகாததேசெய்வானாதலால் மேகாந்தனென்று
நினைத்து என்னை இகழேல் எதிராசா!
என்று உன்னடிவேர்வன் யான்?

Even after knowing that this is not proper
and even after preaching it to others
If I do only unrighteous things,
do not despise me, O Yatiraja,
considering me a sinner.
When will I reach your feet?

17. பொல்லாங்கனைத்தும் பொதிந்துகொண்டு நன்மையிலொன்
றில்லாவெனக்கும் எதிராசா! நல்லார்கள்
நண்ணும் திருநாட்டை நாந்தருவனென்று நீ
தண்ணென்றிருக்கிறதென்றான்?

O Yatiraja, you promised to give
that holy land
which only the meritorious attain
even to me who harbors within
all evils
but no trace of goodness.
Why are you so silent now?

18. என்று விடிவது எனக்கு எந்தாய் எதிராசா!
ஒன்றுமறிகின்றிலேன் உரையாய் குன்றாமல்
இப்படியே இந்தவுயிர்க்கென்றும் இருளே விளைக்கும்
இப்பவமாம் நீண்டவிரைவு.

O my father, Yatiraja,
when is the light going to dawn for me?
I grope in the dark. Tell me.
This existence which is a long night,
will it thus always engulf me in darkness
without decrease?

19. அல்லும்பகலும் யானாக்கை வழியென்று
செல்லுமது உன்தேசுக்குத் தீங்கன்றோ? நல்லார்கள்
தந்தநயர் நீசர்க்காட்செய்யச் சகிப்பரோ?

Day and night I pursue the path of the flesh,
is it not a blemish on your glory?
Will the righteous suffer their sons

எந்தையெதிராசா!

to be ruled by the wicked?
Tell me, O father Yatiraja.

20. போம்வழியைத் தருமென்னு மின்பமெல்லாம்
புசிந்து வழிபோய் அமுதவிரசையாற்றில்
நாம்மூழ்கிமலமற்றுத் தெளிவிசும்பை
நண்ணி நலந்திகழ்மேனி தன்னைப் பெற்றுத்
தாம் அமரர்வந்தெதிர் கொண்டலங்கரித்துச்
சற்கரிப்பமாமணி மண்டபத்துச் சென்று
மாமலராள்கோன் மடியில் வைத்துகக்கும்
வாழ்வு நமக்கெதிராசனருளும் வாழ்வே.

The life that will be offered to us by Yatiraja
will be this:
Enjoying happiness through the assurance
that the path will be shown to us
and pursuing that path [Arcciradi marga]
being cleansed by the waters of the Viraja river
[of eternal purification]
nearing the bright heavens,
receiving the body that shines with goodness
[made of pure sattva gina]
being welcomed on the way
with decorations and hospitality
by the eternally freed Devas
entering the golden hall in their company
and rejoicing on the lap of the Lord of Lakshmi.
[Such is the life that is offered to us by Yatiraja]

21. திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
திருமதி கொண்டவர் தம்மைஉத்தாரகராகவென்னி
இருமனமே அவர்க்கா யெதிராசரெமைக்கடுக
பரமபதந்தன்னிலேற்றுவர் என்னபயம் நமக்கே?

O soul, be firm,
drawing strength from the wisdom
given by the grace of Tiruvaymolipillai
known as Tirumalaiyalvar,
Considering him alone as your refuge;

At least for his sake, Yatiraja will lead us
quickly to the feet of the lord.
What is there for us to fear?

22. தீதற்றாஞானத்திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
ஏதத்தைமாற்றும் எதிராசர்தம் அபிமானமென்னும்
போதத்தையேறிப்பவமாம் புணரிதனைக்கடந்து
கோதற்றமாதவன் பாதக்கரையைக் குறுகுவனே.

By the grace of Tiruvaymolipillai
endowed with pure wisdom,
Yatiraja will dispel the evil;
Climbing on the boat of his mercy,
crossing the Ocean of birth-and-death (*Samsara*),
we shall reach the shore
of the feet of Madhava (husband of Lakshmi)
who is without blemish.

23. அடியார்கள்குழாங்க ளழகோலக்கமிருக்க
ஆநந்தமயமான மாமணிமண்டபத்துப்
படியாதுமில் படுக்கையிருக்கு மநந்தன்
பணாமணிகள் தம்மினொளிமண்டலத்தினிடையில்
வடிவாரும் மாமலராள் வலமருகும் மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகும் இருக்க
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக்கடுக
நான் அனுபவிக்கும்வகை நல்கு என்எதிராசா!

Show me, O Yatiraja,
the way how I should experience soon
Narayana who is seated in the middle
with the beautiful Lakshmi on his right
Bhuddevi and Neeladevi on his left
amidst the clusters of lights
emanating from the pearls of hoods of Adisesha
who forms his incomparable bed
in the blissful diamond hall
surrounded by the gods.

24. இந்தவுடல்விட்டு இரவி மண்டலத்தூடேகி

Leaving this body,

இவ்வண்டங்கழித் திடையிலாவரணமேழ்போய்
அந்தமில்பாழ்கடந்து அழகார்விரசைதனிற்குளித்து அங்கு
அமானவனாலொளி கொண்டசோதியும்பெற்று அமரர்
வந்தெதிர்கொண்டலங்கரித்து வாழ்த்திவழிநடந்த
வைகுந்தம்புக்கு மணிமண்டபத்துச் சென்று
நம்திருமாலடியார்கள்குழாங் களுடங்கூடும்
நாளெனக்குக்குறுகும்வகை நல்குஎன் எதிராசா!

going through the region of the sun,
traversing this whole universe,
the middle seven regions
and the endless inner region (outer space)
taking bath at the beautiful Viraja river,
there receiving the light
emanating from the touch of Amanavan,
then received by the gods on the way
with decoration and praise,
they themselves leading the way
to the Vaikuntha to go the hall of perls
and thus join the group of devotees of our Vishnu.
Show me the way, O Yatiraja, to reach that day.

25. என்றுநிரேதுகமாக வென்னையபிமானித்து
யானுமறிந்து உனக்கேயாயிருக்கும் வகைசெய்தாய்
அன்றுமுதலின்றளவும் அநவரதம்பிழையே
அடுத்தடுத்துச்செய்வது அநுதவிப்பது இனிச்செய்யென்
என்றுன்னைவந்திரப்பதாம் என்கொடுமைகண்டும்
இகழாதேயிரவுபகலடிமை கொண்டுபோந்தாய்
இன்றுதிருநாடும் எனக்கருள எண்ணுகின்றாய்
இனிக்கடுகச்செய்தருளவேண்டும் எதிராசா!

From the time you had
shown me mercy gratuitously
and shown me the way
to belong to you alone consciously,
from that time onwards till today
I have committed countless sins one after another
and repented for them and then pleaded
that “Now I will not do that anymore”.
Even after seeing this misery of mine
without despising, always you accepted me.
Today you deign to offer me the holy adobe (moksa)

Yatiraja, now let me attain it soon.

26. தென்னரங்கர்தமக்காமோ? தேவியர்கட்காமோ?
சேனையர்கோன் முதலான சூரியர்கட்காமோ?
மன்னியசீர்மாறன் அருள்மாரிதனக்காமோ?
மற்றுள்ளதேசிகர்கள் தங்களுக்குமாமோ?
என்னுடையபிழைபொறுக்க யாவருக்கு முடியும்?
எதிராசா! உனக்கன்றி யானொருவர்க்காகேன்
உன்னருளாலெனக்குருசிதன்னையும் உண்டாக்கி
ஒளிவிசும்பிலடியேனை யொருப்படுத்துவிரைந்தே.

O Yatiraja! Who can forgive my faults?
Is it possible for Vishnu abiding in Srirangam?
Or for the goddesses? Or for the gods such as
Vishvaksena
and others?
Or for Satakopan of unending fame?
Or for Tirumangaiyalvar?
Or for teachers
[like Nathamuni, Yamunamuni and others]
[to forgive my faults?]
Yatiraja, I will not belong to anyone except to you.
Soon make me worthy of the brilliant heaven
[the feet of the Lord]
by creating a taste for it in me by your grace.

27. இவ்வுலகில் இனியொன்று மெண்ணாதேநெஞ்சே!
இரவுபகலெதிராச ரெமக்கினிமேலருளும்
அவ்வுலகையலர்மகள்கோ னங்கிருக்குமிருப்பை
அடியார்கள் குழாங்கள்தமை அவர்களநுபவத்தை
இவ்வுயிருமதுக்கிட்டுப் பிறந்திழந்து கிடந்த
தென்னுமத்தை என்றுமதுக்கிடைச்சுவராய்க்கிடக்கும்
வெவ்வினையால்வந்தவிடல் விடும்பொழுதைவிட்டால்
விளையுமின்பந்தன்னை முற்றும்விடாமலிருந்தெண்ணே.

O my mind,
do not think of anything else in this world,
but think continuously and only
of that world day and night
which Yatiraja will offer us hereafter;
think of the abode of the Lord of Lakshmi,
the fellowship of the Gods,
and their experience;

think that you were born for the service of
the Lord and lost that goal!
think of the moment when the body,
that has come about by Karma
and remains as hindrance,
shall be abandoned,
and of the joy that will follow.

28. பண்டுபலவாரியரும் பாருலகோருய்யப்
பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மை
கண்டதெல்லா மெழுதியவைகற்றிருந்தும் பிறர்க்குக்
காதலுடன் கற்பித்துங் காலத்தைக் கழித்தேன்
புண்டரீகை கேள்வனுறை பொன்னுலகுதன்னில்
போகநினைவொன்றுமின்றிப் பொருந்தியிங்கேயிருந்தேன்
எண்டிசையுமேத்துமெதிராசனருளாலே
எழில்விசும்பையன்றீப்போதென்மனமெண்ணாதே.

I spent my time learning
and teaching others with love
and writing diverse things
Which many ancient Acharyas did
with compassion for the salvation of the world.
I stayed here without any thought of seeking
the golden abode
where the Lord of Lakshmi dwells.
my mind, do not now think of anything
except the beautiful heaven
by the grace of Yatiraja
who is universally praised.

29. சாறுவாகமதம்நீறுசெய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே
சாக்கியக்கடலைவற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறித்திட
மாறுசெய்திடுகணாதவாதியர்கள் வாய்தகர்த்தறமிகுத்துமேல்
வந்தபாசுபதர்சிந்தி யோடும்வகை வாதுசெய்த எதிராசனார்

Yatiraja reduced the Carvaka religion to dust,
set fire to the plant of Camanar (Jains),
made the ocean of Buddhism dry,
split the mouontain of Samkhyas,

கூறுமாகுருமதத்தொடோங்கிய குமாரிலன்மதமவற்றின்மேல்
கொடியதர்க்கசரம்விட்டபின் குறுகியமாயவாதியரைவென்றிட
மீறிவாதில்வருபாற்கரன்மதவிலக்கடிக் கொடியெறிந்துபோய்
மிக்கயாதவமதத்தைமாய்த்த பெருவீரர் நாளும்மிகவாழியே

destroyed the opposing arguments of the atomists
(Nyaya-Vaisesikas),
disputed the Pasupatas (who still confronted him),
he shot the arrow of dispute against the Kumarila school
along with the well-known Prabhakara school,
won the nearby group of mayavadins (advaitins),
burnt the banner planted by the mountain side of
Bhaskara who still came to dispute,
and destroyed the famous Yadavaprakasa's position.
May such a great hero live long.

30. சீராருமெதிராசர் திருவடிகள்வாழி
திருவரையிற்சாத்திய செந்துவராடைவாழி
ஏராரும்செய்யவடிவு எப்பொழுதும்வாழி
இலங்கியமுந்நூல்வாழி இணைத்தோள்கள்வாழி
சோராததுய்ய செய்யமுகச்சோதிவாழி
தூமுறுவல்வாழி துணைமலர்க்கண்கள்வாழி
ஈராறுதிருநாமமணிந்த எழில்வாழி
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரைவாழியே

Hail, the holy feet of Yatiraja
full of auspicious qualities,
Hail, the saffron robe around your waist,
Hail, forever your golden form all beautiful,
Hail, the shining sacred thread,
Hail, both your shoulders,
Hail, the brilliance of your face,
fresh, pure and beautiful
Hail, your serene smile,
Hail, your flowerlike eyes,
Hail, your beautiful twelve holy names,
Hail, your beautiful teaching posture
And its sweet abode.

31. அறு சமயச் செடி அதனை அடி அறுத்தான் வாழியே
அடர்ந்து வரும் குதிட்டிகளை அறுத்துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தோன் வாழியே
மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே
அறமிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே

Hail, the one who lashed the root of the plant
of the six systems,
Hail, the one who completely cleared the weeds of
heterodox interpreters
Hail, the one who utterly destroyed the detestable kali
(who causes all these confusions)
Hail, the one who refurbished all the jewels
of the Lord of SriRangam
Hail, the one who unraveled the Vedas
Hail, the one who nurtured
the Tamil precepts of Nammalvar
Hail, the one who was born in the beautiful
and righteous Sriperumputur
Hail, the beautiful and holy feet of Yatiraja.

32. சங்கரபாற்கர யாதவபாட்டப் பிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுற வாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திருநாள்
வெங்கலி இங்கினி வீறு நமக்கிலை என்று மிகத்தளர் நாள்
மேதினி நஞ்சுமை ஆறும் எனத்துயர்விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்கா புரி மாமலை மற்றும் உவந்திடு நாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே

O the day the four Vedas began to prosper
on the defeat and downfall of their enemies:
Sankara, Bhaskara, Yadava, Bhatta, Prabhakara;
O the day when the cruel Kali gave up saying
there is henceforth no room for haughtiness;
O the day when the earth emerged from grief
that there is no more burden [of the wicked people]
O the day when the purpose of the birth of Tirumangai,
Nammalvar and other ancients is fulfilled;
O the day when the famous SriRangam, Tirupati and

other places rejoice;
O the day of Tiruvatirai (the sixth lunar astercism)
when we were blessed
with Ilaiyalvar of Sriperumputur
which is always prosperous,
encircled by fields of rice
and tanks full of fishes.

33. இன்னமெத்தனைகாலமிந்தவுடம்புடன் யானிருப்பன்?
இன்னபொழுதுஉடம்புவிடும் இன்னபடியதுதான்
இன்னவிடத்தேயதுவும் என்னுமிவையெல்லாம்
எதிராசா! நீயறிதி யானிவையொன்றறியேன்
என்னைஇனி இவ்வுடம்பை விடுத்து உன்னருளால்
ஏராரும்வைகுந்தத்தேற்ற நினைவுண்டேல்
பின்னைவிரையாமல் மறந்திருக்கிறதென்? பேசாய்
பேதமைதீர்த்துவென்னை யடிமைகொண்ட பெருமானே!

Yet how long shall I be confined in this body?
When shall I be free?
In what way? how? where?
of all these things, I know nothing, O Yatiraja,
but then you know.
If you intend to take me
to the gracious Vaikuntham,
after releasing me from my body by your grace,
then why this apathy, why this delay?
Speak, O Lord,
you who put an end to my delusion
and accepted me as your servant.

34. முன்னைவினைபின்னைவினை யாரத்தமென்னும்
மூன்றுவகையான வினைதொகையனைத்தும்யானே
என்னையடைந்தோர்தமக்குக் கழிப்பனெனுமரங்கர்
எதிராசா! நீயிட்ட வழக்கன்றோ? சொல்லாய்

I am the product of a three fold *karma* -first,
(before coming to the Lord), then (after coming to Him)
and now (through my present actions)
“Those who reach me, will I release [from their *karma*]

உன்னையல்லதறியாதயான் இந்தவுடம்போடு
உழன்றுவினைப்பயன் பசிக்கவேண்டுவதொன்றுண்டோ?
என்னுடைய இருவினையை இறைப்பொழுதில்மாற்றி
ஏராரும்வைகுந்தத் தேற்றிவிடாய்நீயே

[says Ranganatha]
Is that not your decree, O Yatiraja;
Tell me, Should I, who do not know anything
except you, be a prey to [this miserable body] my senses,
suffer the pains and penalties of my sins?
Purge me instantly of my cruel *karma*
and take me to that beautiful Vaikuntha.

35. அருளாலேஅடியேனை அபிமானித்தருளி
அநவரதமடிமைகொள்ள நினைத்துநீயிருக்க
மருளாலேபுலன்போக வாஞ்சைசெய்யுமென்தன்
வல்வினையைமாற்றி உன்பால்மனம் வைக்கப்பண்ணாய்
தெருளாரும்கூரத்தாழ்வானும் அவர்செல்வத்
திருமகனார்தாமுமருளிச்செய்த தீமைத்
திரளானவத்தனையும் சேரவுள்ளவென்னைத்
திருத்தியுய்யக்கொள்ளும்வகை தேருமெதிராசா!

While you have destined to make me yours for ever
granting me your gracious protection,
I am drawn by delusion to the pleasures of the senses.
Save me from the clutches of this pitiless *karma*
and help me to turn my mind back to you.
Tell me, O Yatiraja, the way I could repent
and attain heavenly bliss,
I who merit the curse of all my inquities
which have been enumerated
by the all-searching minds of Kurattalvan
and his dear son (Parasarabhattar)
as their own (out of great humility,
though they were great men).

36. வாசனையிலுற்றமோ மளாதவல்வினையோ?
ஏதென்றிறியேன் என் எதிராசா! தீதாகும்
ஐம்புலனிலாசை அடியேன் மனந்தன்னை

Is it the source of vasana
or the outcome of the undying all powerful *karma*?
I know not, O Yatiraja.

வன்புடனேதனடரும் வந்து

The evil desire of the five senses
assails me, your servant
and batters me relentlessly.

37. இன்றளவுமில்லா அதிகாரம் மேலுமெனக்கு
என்றுளதாம்சொல்லாயெதிராசா! குன்றா
வினைத்தொடரைவெட்டிவிட்டு மேலைவைகுந்தத்து
எனைக்கடுகவேற்றாததென்?

Tell me, Yatiraja,
when will I attain that worthiness
of which I see no sign till now?
why don’t you overthrow
the never-ending *karma*
and raise me to reach
the lofty Vaikuntha.

38. அஞ்சிலறியாதாரைம்பதிலும் தாமறியார்
என்சொலெனக்கோ எதிராசா? நெஞ்சம்
உனதாளொழிந்தவற்றையே யுகக்க இன்றும்
அனுதாபமற்றிருக்கையால்

One who does not learn at the age of five,
will not learn even at the age of fifty;
Is this saying perhaps meant for me, O Yatiraja?
My heart, delights only in things abhorrent to you
that are not of your service.
That is because even today it is unrepentant.

39. வேம்புகறியாகவிரும்பினார் கைத்ததென்று
தாம்புகடாதே புசிக்கும்தன்மைபோல் தீம்பனிவ
னென்று நினைத்துவென்னையிகழாரெதிராசர்
அன்றறிந்தங்கீகரிக்கையால்

Though I may be like those
who persist in tasting the neem
despite its bitterness
do not despise me, O Yatiraja,
for you have known me long
and accepted me.

40. அவத்தேபொழுதை அடியேன்கழித்துப்
பவத்தேயிருக்குமதுபண்போ? திவத்தேயான்
சேரும்வகையருளாய் சீராரெதிராசா!
போருமினியிவ்வுடம்பைப்போக்கு

Is it just and proper that
In vain I exist in this world wasting my time?
O Yatiraja, graciously show me the way
to reach the Vaikuntha; that is enough for me.
Now rid me of this body and set me free.

41. எனைப்போல்பிழைசெய்வார் இவ்வுலகிலுண்டோ?
உனைப்போல்பொறுக்கவல்லார் உண்டோ? அனைத்து
வாழப்பிறந்த எதிராமாமுனிவா!
ஏழைக்கிரங்காயினி

Is there in this world
a worse sinner than me
Who will make mistakes? and
Who can show greater forbearance than you?
Is there anyone like you who can forgive?
O Yatiraja, great sage, you were born
in order that the whole world may live,
Have mercy then on the poor such as me.

42. ஐம்புலன்கள்மேலிட்டரும்பொழுது அடியேன்
உன்பதங்கள்தம்மை நினைத்தோலமிட்டால் பின்பவைதாம்
என்னையடராமல் இரங்காயெதிராசா!
உன்னையல்லாம் எனக்குண்டோ?

When the five senses overpower [me]
If I, your servant,
thinking of your feet, cry to you [for help]
then they will cease to pursue me, Yatiraja,
Without you is there [anybody] for me?
[There is none].

43. இந்தவுலகிற்பொருந்தாமைஏதுமில்லை
அந்தவுலகிற்போக ஆசையில்லை இந்தநமக்கு

I have no wish to renounce this world
I have no longing to seek the other

எப்படியோதான் தருவரெந்தையெதிராசா!
ஒப்பில்திருநாடுகந்து?

To such as me how can our father,
Yatiraja, willingly grant the holy land
which is without parallel.

44. மாகாந்தநாரணானர் வைகுந்தவகையறிந்தோர்க்கு
ஏகாந்தமில்லை இருளில்லை மோகாந்தர்
இவ்விடமேகாந்த மிருளென்று பயமற்றிருந்து
செய்வார்கள் தாம் பாவத்திறம்

Those who know the way to the abode
of Narayana, the husband of Lakshmi,
know no loneliness, (no secrecy) no darkness,
[but] those who dwell in delusion find
this place lonely, hidden and dark
and indulge in wicked deeds without fear.

45. நாராயணன்திருமால் நாரம்நாமென்னுமுறை
ஆராயில்நெஞ்சே! அனாதியன்றோ? சீராரும்
ஆசாரியனாலேயன்றோ? நாமுய்ந்ததென்று
கூசாமல் எப்பொழுதும் கூறு

When you consider our relation,
that Narayanan, Tirumal, abides in us
and we in Him (as eternal souls),
O mind, are you not convinced
that you have existed from the beginning?
By the gracious teacher alone are we saved.
Then proclaim this truth always, [O my heart]
without fear.

46. திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோந்தம்மைக்
குருவாகிவந் துய்யக்கொண்டு பொருவில்
மதிதானளித்தருளும் வாழ்வென்றோ நெஞ்சே!
எதிராசர்க் காளானோம்யாம்

O mind, it is not true
that we became the servants of Yatiraja
through the incomparable knowledge
[born of sacred *mantras*] made possible
for us victims of cruel *karma*

by Tiruvaymolipillai coming as the teacher.

47. இராமானுசாயநமவென்று இரவும்பகலும்சிந்தித்து
இராமானுசர்களிருப்பிடந்தன்னி லிறைப்பொழுதும்
இராமானுசவர்க்கெல்லா வடிமையுஞ் செய்யவெண்ணி
இராமானுசர்தம்மை மாநுசராவென்கொலெண்ணுவதே!

How can we regard such people as human beings,
who do not think of serving those
who do not want to stay even for a moment
with such people who do not meditate
day and night [on the *mantra*]:
“Salutations to Ramanuja”.

48. எண்ணாதென்னெஞ்சுமிசையாதென்நா இறைஞ்சாதுசென்னி
கண்ணானவையொன்றும்காணலுறா கலியார்நலிய
வொண்ணாதவண்ணம் உலகளித்தோனெதிராசனடி
நண்ணாதவரை அரங்கேசர்செய்தநலம்நமக்கே

My mind will not think,
my tongue will not speak
my head will not bow down,
my eyes will see nothing, of those
who do not approach the feet of Yatiraja
who saved the world from the cruel Kali.
This is the favor bestowed on us by Ranganatha.

49. நந்தாநரகத்தழுந்தாமை வேண்டில் நானிலத்தீர்!
எந்தாதையான எதிராசனைநண்ணும் என்றுமவ
னந்தாடிதன்னைசந்தியும் அவன்தொண்டருடன்
சிந்தாகுலம்கெடச்சேர்ந்திரும் முத்திபின்சித்திக்குமே

O people of the four corners of the world
if you desire
not to be plunged into the undying hell,
approach Yatiraja, our father,
always sing his praises
[Through the hymn Ramanujanoortantati]
Join the company of his devotees
in order that mental anguish may be removed.

Then liberation will be realized.

50. அவத்தேயருமந்தகாலத்தைப் போக்கி அறிவின்மையால்இப்
பவத்தே உழல்கின்ற பாவியர்காள்பல காலம்நின்று
தவத்தேமுயல்பவர்தங்கட்கு மெய்தவொண்ணாத வந்தத்
திவத்தேயுமைவைக்கும் சிந்தியும்நீரெதிராசனென்றே

Squandering that precious time you, sinners,
who wallow in this world [of *samsara*], of ignorance,
approach and say to him: “You are Yatiraja”;
then will be yours that Vaikuntha
which is unattainable
even by those who strive after it
through long and ceaseless penance.

51. என்றுளனீசனுயிருமன்றேயுண் டிக்காலமெல்லாம்
இன்றளவாகப் பழுதே கழிந்து இருவினையால்
இன்றிழவின்யிருக்குமென்னெஞ்சம் இரவுபகல்
நின்றுதபிக்கும் எதிராசா! நீயருள் செய்தபின்னே

Ever since the lord exists,
from that time on the Jivatman exists;
All this time up to now has been spent in vain
misled by cruel *karma*;
O Yatiraja, on receiving your favor
[to realize this]
my mind bemoans day and night
that great loss.

52. கனககிரிமேல் கரியமுகில்போல்
வினதைசிறுவன் மேற்கொண்டு தனுவிடும்போது
ஏராரரங்கரெதிராசர்க்காக என்பால்
வாராமுன்னிற்பர் மகிழ்ந்து

Like the dark cloud on the golden mountain,
Climbing on the son of Vinatai (Karudavahana),
the effulgent Ranganatha will stand
before me with delight, (reveal his presence)
out of love for me
for the sake of Yatiraja,

when my body is cast off
(at the moment of death).

53. இதத்தாலேதென்னரங்கர் செய்கின்றதென்றறிந்தே
யிருந்தாலும் தற்காலவேதனையின் கனத்தால்
பதைத்தாலோ என்னுமிந்தப்பாவவுடம்புடனே
பலநோவுமநுபவித்திப் பவத்திருக்கப்போமோ?
மதத்தாலே வல்வினையின் வழியுழன்று திரிந்த
வில்வினையேன் தன்னை யுனக்காளாக்கிக்கொண்ட
இதத்தாயும்தந்தையுமா மெதிராசா! என்னை
இனிக்கடுகவிப்பவத்தினின்று மெடுத்தருளே

Even when I know that this is done
by the Lord of SriRangam for my good,
because of the burden of present suffering,
I cry aloud trembling
should I live on this world
a prey to sickness, chained to this sinful body,
O Yatiraja, like my good mother and father,
you have made me your own,
me, who in the power of cruel karma,
am drifting away from you,
tossed about by arrogance;
take me soon out of this worldly existence.

54. இன்ன மெத்தனை நாளிவ்வுடம்புடன்
இருந்து நோவுபடக்கடவேனையோ!
என்னை யிதினின்றும்விடுவித்து நீர்
என்றுதான்திரு நாட்டினு ளேற்றுவீர்?
அன்னையுமத்த னுமல்லாத சுற்றமும்
ஆகியென்னய ளித்தருள் நாதனே!
என்னிதத்தை யிராப்பகலின்றியே
ஏகமெண்ணுமெதிராச வள்ளலே!

How many days longer am I going to suffer
imprisoned in this body?
[I do not know].
When will you release me from this misery
and lead me to the holy land?
Be unto me father, mother and all my kindred;
O Lord, save me;
day and night, O beautiful Yatiraja,

think only of what is for my good.

55. தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப்பெற்றோம்
திருவரங்கம் திருப்பதியே யிருப்பாகப்பெற்றோம்
மன்னியசீர்மாறன்கலை யுணவாகப்பெற்றோம்
மதுரகவிசொற்படியே நிலையாகப்பெற்றோம்
முன்னவராம்நங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம்
முழுதும்நமக்கவை பொழுதுபோக்கப்பெற்றோம்
பின்னையொன்றுதனில் நெஞ்சுபேராமல் பெற்றோம்
பிறர்மினுக்கம்பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோமே

We became the object of abundant favor
from the lord of SriRangam,
We received Tiruvarangam and Tirupati
as our abodes
We received as food the art of Satakopan
of undying fame,
We stood firm by the word of Maturakavi,
We meditated on the writings of our forefathers,
our Acharyas,
We took them all as our life’s mission
We stood steadfast,
our hearts unmoved by other things
We attained glory too,
without being jealous of others’ greatness.

56. உன்தனபிமானமேயுத்தாரகமென்று
சிந்தைதெளிந்திருக்கச்செய்தநீ அந்தோ
எதிராசா! நோய்களா லென்னைநலக்காமல்
சதிராக நின்திருத்தாள் தா

O Yatiraja, you who made us realize
that your esteem alone is our support,
O, alas,
do not test me with sickness,
but permit me graciously
to reach your holy feet.

57. தேசிகர்கள்போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை

O Yatiraja,

வாசமலர்த்தாளடைந்த வத்துவென்னும் நேசத்தால்
என்பிழைகள்காணா வெதிராசரே! அடியேன்
புன்பகர்வைக்கேளும் பொறுத்து

do not reproach me with my faults
now that I have surrendered
at the flower-like feet of Tiruvaimolipillai
who is praised by our Acharyas.
Listen to my humble petition patiently.

58. எந்தைதிருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால்
உன்தனுறவையுணர்த்தியபின் இந்தவுயிர்க்
கெல்லாவுறவும் நீயென்ற யெதிராசா!
நில்லாத துண்டோ வென்னெஞ்சு?

I perceive your relationship to me
by the grace of our father Tiruvaimolipillai,
O Yatiraja,
are you not everything to me,
all my kith and kin?
Will not my heart abide by it?

59. எந்தைதிருவரங்க ரேரார்கருடன்மேல்
வந்துமுகங்காட்டி வழிநடத்தச் சிந்தைசெய்திப்
பொல்லாவுடம்புதனைப் போக்குவதென்னாள்லொலோ?
சொல்லாயெதிராசா! சூழ்ந்து

When will our father Tiruvarangar,
appear to me on his beautiful Karudan
and lead the way?
Reflect and tell me , Yatiraja,
When shall I be rid of this evil body?

60. இந்தவரங்கத்தினிதிருநீ யென்றரங்கர்
எந்தையெதிராசர்க் கீந்தவரம் சிந்தைசெய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே! நற்றாதைசொம்புதல்வர்
தம்மதன்றோ தாயமுறைதான்.

You dwell blissfully
at this temple of SriRangam;
that was the boon granted by Rangarajan
to our father Yatiraja!
That being so, O mind!
is not that boon ours too?

Dos not the wealth of the father
belong to the son?
So decrees the law of inheritance.

ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஆர்த்திப்ரபந்தம் ஸம்பூர்ணம்.